# 13 தேர்ச்சி - இரண்டு:- கிறிஸ்துக்குள் புதுவாழ்வு வழங்கும் அருளடையாளங்களைப் பெறுவர்

## 2.5 கிறிஸ்துவின் உறவில் மலரும் துறவறம்



ஒரு காட்டில் அணிலும் யானையும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் அணில் மாமரத்தின் மேலிருந்து மாம்பழத்தைத் தின்றுகொண்டு மரத்தின் கீழே நின்ற யானையைப் பார்த்து சிரித்தது.

யானைக்கு கோபம் பொங்கிக் கொண்டு வந்து அணிலைப் பார்த்து கத்தியது.

யானை : ஓ... நீர் மரத்தின்மேல் இருப்பதால் பலசாலி என்ற எண்ணமோ? அளவுக்கு அதிகமாக துள்ள வேண்டாம். அளவோடு இரு.

அணில் : ம்... ம்... நீ பலசாலி என்றால் என்னைப்போல் மரத்தின் உச்சிக்கு வர முடியுமா?

யானை : எனக்கு மர உச்சிக்கு வரவேண்டிய அவசியமில்லை. ஆனால், மரத்தோடு உன்னையும் கீழே சாய்க்க முடியும்.

அணில் : உன்னால் முடியுமென்பதை ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், என்னைப்போல் மர உச்சிக்கு உன்னால் வர முடியாது.

யானையால் செய்யக்கூடியவற்றை அணிலால் செய்யமுடியாது,
அணிலால் செய்யக்கூடியவற்றை யானையால் செய்யமுடியாது.

### இரண்டும் தனித்துவமான படைப்புகள்

ஒவ்வொருவருக்கும் சில ஆற்றல்கள் உள்ளன. ஆனால் எல்லோருக்கும் தனித்துவமான அழைப்பொன்று உள்ளது.







அழைத்தல் என்பது பல வகைப்படுகின்றன. ஆனால், எல்லாம் இறைவனிடமிருந்தே வருகின்றன.

**இல்லறம், குருத்துவம், துறவறம்** ஆகியவை இறைவனின் அழைப்பாகும். ஏனெனில், எல்லா அழைப்புகளுக்கும் இறைவனே ஊற்றாக இருக்கின்றார்.

இறைவனை நெருக்கமாகப் பின்செல்வதற்காக நற்செய்தி அறிவுரைகள் (ஏழ்மை, கற்பு, பணிவு) வழியாக திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் தம்மைப் பூரணமாக இறுதிவரை அர்ப்பணித்தவர்களைத் துறவிகள் என்கிறோம்.

ஆண், பெண் துறவிகள் தத்தம் துறவற சபைகளின் ஆன்மீகத்தைப் பின்பற்றி திருச்சபையின் பணியில் பங்குகொள்கின்றனர். தம் அர்ப்பண வாழ்வாலும் முழுத் திருச்சபைக்குரிய செபத்தினாலும் தன்னலம் கருதாத சேவையினாலும் இறையரசின் வளர்ச்சிக்காக உழைக்கிறார்கள். இவர்களின் சேவைகள் பல வகையாக இருந்தாலும் இச்சபைகளின் குறிக்கோள் **இறையரசைக் கட்டியெழுப்புவதேயாகும்.**



**செப வாழ்வு** : துறவிகளின் அர்ப்பண வாழ்க்கைக்கு ஆற்றலும், வலிமையும் தருவது செபமாகும்.

**குழு வாழ்வு** : ஒரே ஆன்மீகத்தில் சகோதர, சகோதரிகளாக சேர்ந்து சாட்சிய வாழ்வு வாழ்வது ஓர் உடலாகிய திருச்சபையின் அடையாளமாகின்றது.

**பணி வாழ்வு** : செப வாழ்விலும் குழு வாழ்விலும் இறை பணியாற்ற துறவியருக்கு அழைப்பும் ஆற்றலும் கொடுக்கின்றது.

கிறிஸ்துவின் வருகைக்கு முன்னரும் வீடுகளிலும், குகைகளிலும் இறைபணிக்கென தம்மை அர்ப்பணித்தவர்கள் இருந்தார்கள்.

**உதாரணம்** : திருமுழுக்கு யோவான்

திருச்சபையின் ஆரம்பத்திலிருந்தே துறவு வாழ்க்கையானது திருச்சபையை வளர்ப்பதிலும், அழகுபடுத்துவதிலும் பெரும் பங்காற்றி வந்துள்ளது. வனத்து அந்தோனியாரை பின்பற்றி திருச்சபையில் நூற்றுக்கணக்கான துறவற சபைகள் பிறந்துள்ளன. காலத்தின் தேவைகளுக்கேற்ப இறைவனும் தம் மறையுடலாகிய திருச்சபையை வளர்க்க துறவியருக்கு அழைப்புக் கொடுத்திருக்கின்றார். துறவற சபைகள் பல வகைப்படுகின்றன.

**உறுப்புகளெல்லாம் ஒரே செயலைச் செய்வதில்லை**
**( உரோ. 12 : 4)**

## துறவற சபைகள் சில:

### 1. ஆழ்தியானச் சபைகள்:

இவர்கள் தனிமையிலும் அமைதியிலும் தொடர்ந்து செபத்தில் ஈடுபட்டு, ஒறுத்தல்கள் செய்து நம் அனைவருக்காகவும் செபிக்கின்றார்கள்.

### 2. திருத்தூதுப் பணியாற்றும் சபைகள்:

இச்சபைகள் திருச்சபையால் தமக்கு வழங்கப்பட்டுள்ள போதக, பிறரன்பு பணிகளில் பணியாற்றுவதோடு பங்கு கொள்கின்றனர்.

### 3. ஆச்சிரம துறவு சபைகள்:

இத்துறவியர் தங்கள் மடங்களுக்குள்ளே குழுவாக வாழ்வதிலும் செபிப்பதிலும் ஈடுபடுவதுடன் மறைத்தூதுப்பணியிலும் தம் வாழ்வை அர்ப்பணிக்கின்றனர்.

**4. உலகுசார் சபைகள்:**

2ம் வத்திக்கான் சங்கத்தின் பின்பு ஊக்கம் பெற்ற இச்சபைகள் துறவற சபைகள் இல்லாவிடினும், அதன் உறுப்பினர்கள் நற்செய்தி அறிவுரைகளை (ஏழ்மை, கற்பு, பணிவு) மெய்யாகவும் முழுமையாகவும் வெளிப்படையாகவும் ஏற்கின்றனர். பொது நிலையினரும் நிறைவான அன்பினால் இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்து இல்லறத்திலேயே இருந்துகொண்டு இறை ஊழியர்களாகவும் இருக்கின்றனர்.

இலங்கைத் திருச்சபையிலும் ஏராளமான ஆண், பெண் துறவற சபைகள் இறைபணியில் தம்மை இணைத்துள்ளனர். இறைவனும் ஏராளமான ஊழியர்களைத் தொடர்ந்து வழங்கி வருகின்றார்.

இன்றைய திருச்சபையில் கிடைக்கும் இவ்விசேட அழைப்பான துறவு வாழ்க்கையின் மூலம் இறைவனை நெருங்கிச் செல்வதற்கு வழிகாட்டப்படுவதுடன், விண்ணக மகிழ்வு இவ்வுலக வாழ்க்கையிலே கிடைக்கின்றது எனவும் சாட்சியம் பகரப்படுகின்றது.

**உங்கள் அழைப்பு எதுவென சிந்தித்துப் பாருங்கள்.**

## செயற்பாடு:

- **கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. திருமுழுக்கு யோவான் ஒரு துறவியாவார். ( )
2.. இரக்கச் செயல்களில் ஈடுபடுவது வாக்குத்தத்தமாகும். ( )
3.. துறவியர் இவ்வுலக வாழ்வில் விண்ணக மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்கின்றனர். ( )

## விடை தருக.

1. உமது பங்கில் பணிபுரியும் துறவற மடத்திற்குச் சென்று சிறிய நேர்காணல் மூலம் விபரம் சேகரித்து ஒப்படைக்கவும்.
2. துறவியர் அளிக்கும் வாக்குத்தத்தங்கள் எவை?
3. துறவு வாழ்விற்குரிய மூன்று சிறப்பு வாழ்க்கைப் பண்புகளைப் பெயரிடுக.
4. துறவு வாழ்வை முதன்முதலில் ஆரம்பித்தவர் யார்?
5. உம்மிடமுள்ள ஆற்றல்கள் மூன்றைப் பெயரிடுக.